சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. MCOP. 71/2014**

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் வியாழக்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.1-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வினோத் | தொழில் | ஐ. டி. நிறுவனம் |
| தந்தை பெயர் | சந்தோஷ் | ஜாதி | |
| கிராமம் | புதுப்பட்டு | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**13.03.2025 முதல் விசாரணை**

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டு) **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, 07.03.2014 தேதியிட்ட ஆரணி கிராமிய காவல் நிலைய குற்ற எண்.62/2014 வழக்கின் முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.03.2014 தேதியிட்ட விபத்து பதிவேட்டு நகல் மற்றும் காயச்சான்று சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.05.2014 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவ ரசீதுகள் அசல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆரணி கிராமிய காவல் நிலைய குற்ற எண்.62/2014 வழக்கின் இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆரணி கிராமிய காவல் நிலைய குற்ற எண்.62/2014 வழக்கின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆரணி கிராமிய காவல் நிலைய குற்ற எண்.62/2014 வழக்கின் மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆரணி கிராமிய காவல் நிலைய குற்ற எண்.62/2014 வழக்கின் பார்வை மகசர் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆரணி கிராமிய காவல் நிலைய குற்ற எண். எஸ்.டி.சி நம்பர்1669/2014 வழக்கின் 26.11.2019 தேதியிட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுவில் கோரியுள்ளவாறு உத்தரவாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.